[17th August 1963

(c) The Madras Co-operative Central Land Mortgage Bank has since resolved to post legal assistants at the headquarters of the three Deputy Registrars for Land Mortgage Banks, viz :—

(1) Villupuram.

(2) Salem ; and

(3) Madurai.

The Bank has implemented the resolution with effect from 15th July 1963. On account of certain practical difficulties, the Bank has decided not to post legal assistants in other places.

வைத்தியப் படிப்பிற்கு மாணவர் தேர்வு

*** 205 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் எந்த அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரசினர் நியமித்துள்ள தேர்வுக்குழு, மருத்துவக் கல்லூரிகளில் சேரத் தகுதியுள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பி.யு.ஸி. தேர்வில் 3-வது பிரிவு ஏ குரூப்பில் மாணவர்கள் பெற்றுள்ள மார்க்குகளையும் தேர்வுக் குழு நடத்துகிற பேட்டியில் அவர்கள் பெறும் மார்க்குகளையும் வைத்து, அவர்களை மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

Selection of candidates for admission to Medical Colleges is made by a Selection Committee duly appointed by Government. The Grades obtained by the candidates in the optional subjects under Part III (Group (A) of the Pre-University Examination as well as the marks obtained by them at the interview conducted by the Selection Committee are taken into account and the selections made.

திரு. கரு. சீமைச்சாமி : கல்லூரிகளில் சேருவதற்கு அடிப்படைத் தகுதி இல்லாத மார்க்குகள் வாங்கியுள்ளவர்கள் சேர்க்கப்படுகிறார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தகுதியுள்ள மாணவர்கள்தான் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தகுதியில்லாதவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

திரு. கே. மூக்கையாத் தேவர் : சென்ற ஆண்டுகளில் எல்லாம் தேர்வுக் குழுவானது மதுரை, கோவை, சென்னை முதலிய சென்டர்களுக்கு நேரடியாகப் போய் தேர்வு நடத்தினார்கள். இந்த வருஷத்திலே சென்னையிலே அதனை நடத்திய காரணத்தால் செலவும் சிரமமும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த அந்த சென்டர்களில் போய்த் தேர்ந்தெடுக்க உத்தேசம் உண்டா ?

17th August 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எனக்குத் தெரிந்த வரையில் அந்த மாதிரி ஒவ்வொரு சென்டரிலும் தேர்வு நடந்ததாகத் தெரியவில்லை. ஜில்லா வாரியாக ஆங்காங்கு சென்று தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் அதிகச் செலவாகுமே தவிர கம்மியாகாது.

திருமதி சி. குழந்தையம்மாள் : பி.யூ.சி. வகுப்பில் மூன்றாவது பார்ட்டில் சப்ஜக்டில் சி. ப்ளஸ் அல்லது 'பி' வாங்கியவர்களுக்கு அட்மிஷன் கிடைத்து சில மாணவர்கள் 'ஏ' ப்ளஸ் 'டி' எடுத்தும் அட்மிஷன் கிடைக்காமல் இருப்பவர்கள் எவ்வளவு பேர்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மொத்த ஸீட்ஸ் எண்ணிக்கை 700, மொத்த அப்ளிகேஷன் 3,000. ஆக 2,300 பேர் அம்மாதிரி இருக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : வைத்தியக் கல்லூரிகளில் அட்மிஷன் கிடைப்பதற்கு 2,000 ரூபாய் கொடுத்தால்தான் நடக்கும், 3,000 ரூபாய் கொடுத்தால்தான் நடக்கும் என்ற அபகீர்த்தி அந்தக் கமிட்டிக்கும் சர்க்காருக்கும் ஏற்படும் வகையில் பொது மக்கள் மத்தியில் எண்ணங்கள் நிலவுகின்றன. இந்த எண்ணங்கள் எதனால் ஏற்பட்டன என்பதைப் பற்றிச் சர்க்கார் பரிசீலிக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : புகார் கூறுகின்றவர்கள் என்றைக்கும் கூறிக்கொண்டுதான் இருப்பார்கள்.

திரு. கே. பி. பழனிசாமி : வைத்தியக் கல்லூரிகளுக்கு ஜில்லா வாரியாக அட்மிஷன் கொடுக்கும்போது ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில் ஜில்லாவாரியாகப் 'ப்ரொபோர்ஷன்' கொடுக்காமல் மொத்தத்தில் ஹரிஜன மாணவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஜில்லா வாரியாக ஹரிஜன மாணவர்களைத் தேர்ந்தெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த ஆண்டைப் பொறுத்த மட்டில் கோட்டா பிரகாரம் எல்லா கம்யூனிடியிலும் எடுத்தார்கள். பல ஹரிஜன மாணவர்கள் 'ஜெனரல் பூல்'-ல் வந்த காரணத்தால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தத் தேர்வுக் குழுவினர் சென்னையில் இருந்து தேர்வு நடத்துகிற காரணத்தால் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் சென்னைக்கு வருவதன் காரணமாக அவர்கள் ஏராளமான தொல்லைக்கு ஆளாகிறார்கள். அதற்குப் பதிலாக மூன்று பேர்களைக் கொண்ட குழுவினரைக் கொண்டு நான்கு முக்கிய இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு தேர்வு நடத்தினால் பொதுமக்களுக்குப் பெரும் செலவு குறையும் என்று அரசினர் அறிவார்களா? அடுத்த ஆண்டில் இந்த முறையை அமலுக்குக் கொண்டு வர முன் வருவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகின்ற ஆலோசனை பரிசீலனை செய்த பிறகு கவனிக்கப்படும்.

[17th August 1963

திரு. கே. ஏ. மதியழகன் : ஒவ்வொரு ஜில்லாவிற்கும் பிற்பட்ட வகுப்புகளுக்கு என்று இப்படி எல்லாம் ஒதுக்கப்பட்டிருப்பது போல் மந்திரிமார்களுக்கும் இவ்வளவு இடங்கள் என்று ஒதுக்கப் பட்டிருக்கிறதா ? அப்படியானால் அந்த இடங்களின் எண் ணிக்கை என்ன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மந்திரிமார்களுக்கு என்று தனிப்பட்ட ஸீட்டுகள் ஒதுக்கப்படவில்லை. மந்திரிமார் கள் இதில் தலையிடுவதும் இல்லை.

கனம் சபாநாயகர் : மந்திரிமார்கள் காலேஜில் படிக்கப் போகி றார்களா என்ன ?

திரு. ஜே. மாதா கவுடர் : ஒரு மாணவன் பிஸிக்கல் ஸயின்ஸில் டி அல்லது டி ப்ளஸ் எடுத்து நாச்சுரல் ஸயன்ஸில் 'ஸி' எடுத்து விட்டால் விண்ணப்பம் செய்யக்கூட தகுதியில்லாதவராகி விடு கிறார். இப்படி டிஸ்டிங்க்ஷன் எடுத்த மாணவர் விண்ணப்பம் செய்த பின் பரிசிலனை செய்து முடிவு எடுப்பதில் என்ன இடைஞ் சல் இருக்கிறது ? வேறு மாநிலங்களில் இன்டர்வ்யூக்கு கூப்பிடு கிறார்களே, இதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : செலக்ஷன் கமிட்டிக்கு ஓரளவு மார்க் ஒதுக்கப்பட்டிருக்கிறது, 'ஃபார் அதர் ஆக்டிவிட் டீஸ்'-க்கு என்று. இவற்றிற்கு, இச்சட்டத்திற்கு அடைபட் ஆனால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

கனம் சபாநாயகர் : " 'ஸி' எடுத்திருந்தாலும் அவர்களைக் கூப் பிட்டுக் கேட்டால் என்ன" என்று கேட்கிறார்கள்.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Only for Scheduled Castes and Scheduled Tribes and not for other Communities.

University at Madurai.

* 206 *Q.*-- SRI M. KAYYANASUNDARAM : SRI K. CHEEMAICHAMY : } Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to Legislative Assembly Question No. 175 answered on 9th March 1963, the present stage of the proposal to start a University at Madurai ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : An Expert Committee under the Chairmanship of the Director of Public Instruction to go into the details relating to the establishment of a University at Madurai has been appointed.

திரு. கே. ஏ. மதியழகன் : கடந்த ஆண்டு நம் கல்வி அமைச்சர் அவர்கள் மதுரை பல்கலைக் கழக மசோதாவை இந்தாண்டு நிதி நிலை அறிக்கைக்கு முன்னால் இந்த சபையில் கொண்டு வருவ தாகச் சொன்னார்கள். வருகிற நிதி நிலை அறிக்கைக்கு முன்பாகவா